விலை 0—1—3 "UDAYAM" Weekly. Reg. No. M. 4777




வார வெளியீடு. ஆசிரியர் :— M. கந்தசாமி

மலர் 1 | திருவத்திபுரம் 15—12—46 விய௵ கார்த்திகை௴ 30௳ ஞாயிறு | இதழ் 19

# ★ இயந்திரமும் மனிதனும் ★

மனிதன் அறிவு ஆராய்ச்சி பெருத காலத்தில் கையினால் உழைத்து வந்தான் உழைப்பு அதிகமாக யிருந்தது, பலன் குறைவாகவே கிடைத்து வந்தது. நாட்கள் செல்லச் செல்ல அறிவு வளர வளர இயந்திரங்களைக் கண்டுபிடித்தான். அதாவது கையினால் உழைத்துவந்த நிலைமாறி இயந்திரத்தின் உதவியினால் பலனை அடைய ஆரம்பித்தான். இதனால்; உழைப்பு குறைபவும் பலன் அதிகரிக்கவும் ஆயிற்று. மனிதனின் தேவைக்கான பொருள் இயந்திரத்தின் உதவியினால் எளிதாக கிடைக்க முடிந்தது

உதாரணமாக உலக ஆரம்பத்தில் ஒரு குறிப்பிட்ட சாமானை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமானால் மனிதன் தலையின் மீதோ தோளின் மீதோ அதனைச் சுமந்து சென்றான். பின்னால், எருதுகளையோ குதிரைகளையோ மனிதன் மழக்க ஆரம்பித்த பிறகு அவைகளின் உதவியால் அந்தச் சாமானை எடுத்துச் சென்றான். பின்னால், எருதுகளையோ குதிரைகளையோ மனிதன் பழக்க ஆரம்பித்த பிறகு அவைகளின் உதவியால் அந்தச் சாமானை எடுத்துச் சென்றான். அதற்குப் பிறகு வண்டிகளைக்கண்டு பிடித்த பிறகு வண்டிகளில் அதே சாமானை ஏற்றிச் சென்றதோடு மட்டுமல்ல தானும் அவைகளில் ஏறிச் சென்றான். இதனால், மனிதனின் உழைப்பு குறைந்ததுடன், மனிதன் நடந்து சென்ற கால அளவைவிட அதி விரைவில் செல்ல முடிந்தது.

பிறகு நாட்கள் செல்லச் செல்ல இரயில் மோட்டார் முதலியவைகளைக் கண்டு பிடித்தான். இப்பொழுது முன்னர் 10 மாட்டு வண்டிகளில் ஏற்றிச் சென்ற சாமானை ஒரே ரயிலில் ஒரு சில மணி நேரத்தில் ஏற்றிச் செல்ல முடிந்தது. அது மட்டுமல்ல, 20 மாடுகளும் 10 மனிதர்களும் உழைத்து வந்ததற்குப் பதில் ஒரே மனிதன் உழைப்பே போதுமானதாக முடிந்தது. இதனால் 20 மாடுகளுக்கு வேலையில்லையே 9 மனிதர்களுக்கு வேலையில்லையே என்று சொன்னால் அறிவுலகம் ஏற்றுக்கொள்ளுமா? குறைந்த உழைப்பில் அதே வேலையை செய்து முடிக்க மனிதன் கற்றுக்கொண்டான். ஆகவே, ஒரு நாளைக்கு 10 மணி நேரம் வேலை செய்து வந்தால் போதும் என்ற நிலை ஏற்படவேண்டும். அப்பொழுது தான் ஒருவன் பல மணி நேரம் பாடுபடவும் பலர் ஒன்றுமே பாடுபடாமல் உல்லாச வாழ்வு வாழவும் முடியாது. ஆனால் இன்று நடப்பது என்ன? ஒரு சிலர் அன்றுபோல் இன்றும் 10 மணி நேரம் பாடுபடவும் எலும்பும் தோலுமாக திரியவும் பலர் உழைக்காமல் மெய் வருந்தாமல் உண்டு கொழுக்கவும் ஆன நிலைமைதான் இருந்து வருகிறது. இதற்குக் காரணமென்ன?

காரணம், உற்பத்தியை ஒருசிலர் தங்கள் வசமே வைத்துக் கொண்டிருப்பதாலும் எது உற்பத்தியானாலும் அவர்களுக்கு உரியதாகி விடுகிறது. பலர் பாடுபட்டும் பலனையடைய முடியாமல் போய்விடுகிறது. ஆகவே, இன்று மக்கள் வறுமையால் வாடுவதற்கும் வேலையில்லாமல் கஷ்டப்படுவதற்கும் இயந்திரம் தான் காரணம் என்பது அர்த்தமற்ற வாதமாகும். இயந்திரத்தை ஒரு சிலர் தங்களுடைய தனிசொத்து என்று கருதிவருவதினாலும் அதன் உற்பத்தியெல்லாம் தனக்கே சொந்தம் என்று எண்ணி வருவதினாலும், மனிதன் பிறந்தது 10 மணி நேரம் 12 மணி நேரம் பாடுபடத்தான் என்றும் கருதிவருவதினாலும் தான் இக்கஷ்டங்களெல்லாம் இருந்து வருகின்றன.

இயந்திரங்கள், மனிதன் உழைப்புக்கு பதில் உழைக்கின்றன- இயந்திரங்கள் உழைத்தும், மனிதன் பழையபடியே உழைத்து வரவேண்டுமென்று எதிர்பார்ப்பது எவ்வாறு நியாயமானதாகும்? ஏன் மனிதன் உழைக்கவேண்டும்? இயந்திரங்கள் தான் இத்தீமைகளுக்குக் காரணம் என்றால், இயந்திரத்தை எந்தத் துறையிலும் உபயோகிக்காமல் இருக்க வேண்டும். அப்படிக்கில்லாமல் சில துறைகளுக்குமட்டும் இயந்திரத்தை பயன்படுத்துவதும் மற்றத் துறைகளுக்குக் கண்டிப்பதென்றால் இது நாணயமான காரியமாகுமா?

இதை ஏன் இப்பொழுது சொல்லுகிறோமென்றால், இந்த நாட்டில் ஒருசிலர் மற்றத் துறைகளில் எல்லாம் இயந்திரத்தை பயன் படுத்திக்கொண்டு துணி நெய்வதில் மட்டும் இயந்திரத்தைக் கண்டிப்பதும், கைத்தறிதான் இருக்கவேண்டும் என்று சொல்லி வருகிறார்கள். இதில் மட்டும் அதாவது துணி நெய்வதில் மட்டும் இயந்திரத்தைக் கண்டிப்பானேன்? நூலை நூற்பதற்கு இயந்திரம் வேண்டும் நூலை நெய்வதற்கு இயந்திரம் ஏன் கூடாது? இயந்திரம் நெய்தால், இப்பொழுது நெய்கிறவர்களுக்கு வேலையில்லாமல் போய்விடுமே என்று அஞ்சப்படலாம். அன்று மக்கள் கையினால் நூலை நூற்று வந்த காலையில் இயந்திரம் நூற்க ஆரம்பித்த காலையில் அந்த மக்கள் இன்றுபோல் அஞ்சாமலா இருந்திருப்பார்கள்? அப்படியிருந்தும் இயந்திரம் நூல் நூற்றுதான் வருகிறது. அந்த மக்களும் வேறு வேலைகளில் ஈடுபட்டுதான் வந்திருக்கிறார்கள்.

மக்கள் கஷ்டம் நீங்கவில்லை யென்று வேண்டுமானால் சொல்லலாம். இதற்கு என்ன காரணம் என்பதை மேலே எடுத்துக்காட்டி யிருக்கிறோம். உற்பத்தி தனிப்பட்டவர்களுக்குச் சொந்தம் என்ற நிலைமை மாறுதவரை இக்கஷ்டங்களெல்லாம் ஒழியா அதுமட்டுமல்ல, உழைப்பின் அளவு குறைக்கப்பட வேண்டும். இயந்திரத்தின் பலனை மக்கள் யாவரும் பெறுமாறு செய்யவேண்டும்.

## கல்விமந்திரியாரின் "காலட்சேபம்"

தோழர் அவிநாசிலிங்கம் அவர்கள் அண்ணாமலைப்பல்கலை கழகத்தில் ஆற்றிய உரையில் அச்சம் விடு என கூறினார் ஆனால் அச்சம் தவிர்க்க மார்க்கம் கூறினாரில்லை என மன வருத்தமடைந்தோம்.

12—11—46ல் தூத்துக்குடியில் இந்து மதத்தினர் சங்கத்தில் ஆற்றிய உரையில் எல்லோரும் உயர்ந்த சக்திபெற வேண்டும் அதற்கு ஆண்டவனை வழிபட வேண்டும்" என்று கூறினார்.

சீதையின் சிறப்பைக்கூறி ராமனின் வீரத்தைச் சொல்லி பரதனின் பக்தி

(இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# ★ எதிரொலி ★

(சென்ற வாரத் தொடர்ச்சி)

(பாடுகிறாள்)

வாழ்க்கை யெனும் உடம்பில்—நிகழ்
காதலன்றோ ஜீவன்

பாழ்த்த உலகினிலே—இந்த
பண்பறிந்தாரில்லையோ?

மலரில் நறுமணமாம்—வீணை
நாதத்தினில் சுவையாம்

பழஇடும் கூட்டுறவை—வெட்டி
பாழ்படுத்தல் தகுமோ?

(படுக்கையில் சென்று விடுகிறாள்)

**காட்சி 9**

(குடிசையிலே)

**சேல் :**—(அன்போடு) மாமா!...

**வேல :**—என் செல்வி ?

**சேல் :**—ஒங்ககிட்டே...சொல்லணும்னு......

**வேல :**—என்ன...? சொல்லு.

**சேல் :**—(மௌனம்)

**வேல :**—என் மௌனம்? என்ன சொல்ல நினைத்தாய்?

**சேல் :**—நம்ம சின்ன எசமான்......!

**வேல :**—சின்ன எசமானு! ஓ! சொக்கலிங்கமா? என்ன சங்கதி? பயப்படாமல் சொல்லு.

**சேல் :**—மாமா! நான் தனியா இருக்கிறபோது, வலுவந்தமா எங்கிட்டே வந்து, என்னென்னமோ பேசறாரு, அவரு கண்ணைக்காட்றதும் வாயைப் பொளக்கறதும், மீசையை முறுக்கறதும், பாத்தா பயமாயிருக்குது மாமா!

**வேல :**—(வியந்து) அதென்ன அது? உம்...அவ்வளவுக்கு வந்துட்டாரா சின்ன எசமான்? சரிதான்!

**சேல் :**—அவருக்கு ரொம்ப கெட்டநெனப்பு! எம்மேலையும் ஒங்கமேலையும் கண்ணை வச்சிருக்காரு மாமா, நீங்க சுருக்கா ஒரு வழி பண்ணலேன்னு என் நிலமை துன்பந்தான்...

**வேல :**—என்ன செய்யச்சொல்றே செல்வி?

**சேல்:**—தாத்தா பிரியப்படி...நீங்க...கலியாணம் பண்ணிக்கிட்டா, என்னே ஒருநாளை பாத்து...ஒரு வார்த்தைசொல்ல இடமிருக்காது! ரொம்ப நாளா என் நெஞ்சில் ஊறியிருக்கிற ஆசையும்............!

**வேல :**—(பெருமூச்சுவிட்டு) செல்வி! என் நிலைமை நெருக்கடியானது, உனது நன்மைக்காக நான் எதையும் செய்யத் தயாராக இருக்கிறேன். ஆனால்......கலியாணம் செய்துகொள்வதென்பது......முடியாது.

**சேல் :**—(வருந்தி) அப்போ; ஒங்களுக்கு எம்மேலே கொஞ்சங்கூட பிரியமேயில்லியா? அப்படீன்னு, என் ஆசையெல்லாம் அவலந்தானு? மாமா!......

**வேல :**—செல்வி! நீவருந்த வேண்டாம் நல்ல இடத்தில் உன் கலியாணத்திற்கு ஏற்பாடு செய்கிறேன். பட்டாளத்தில் சேர்ந்து நான் தேடிய பொருளையெல்லாம் உனக்குச் சொந்தமாக்குகிறேன். இன்னும் வேண்டிய தெல்லாம் செய்கிறேன் ஆனால்...செல்வி! தயவு செய்து என்னை மணக்கும் எண்ணத்தை மட்டும் விட்டுவிடு, காதலற்ற கலியாணம் துன்பக்கடலின் படித்துறை!

**சேல் :**—எனக்குப் பணமும் காசும் வேண்டாம். வேறே புருசனும் தேடவேண்டாம். ஒங்க அன்பு ஒண்ணுதான் வேணும் அதுதான் எனக்கு உசுறு! மாமா! நான் பிறந்தவளந்தது ஒங்களுக்காகத்தானே? நீங்களே என்னைக் கைவிட்டா நான் என்ன மாப்போறது? எனக்கு லோகத்திலே வேறே யாரு இருக்கறாங்க?

**வேல :**—செல்வி! உன்மேல் எனக்கு அன்பு இல்லாமலில்லை ஆனால் கலியாணத்திற்குரிய காதல் இல்லையே, நான் என்ன செய்யட்டும்? எப்பொழுதும் உன்னை கைவிடமாட்டேன் வாழ்வுக்கு வேண்டியதை யெல்லாம் தேடிவைக்கிறேன் நீ என் சகோதரி போல் வாழலாம்!

**சேல் :**—இல்லே! ஒங்கலுக்காக வளந்த ஒடம்பும் உயிரும் ஒங்கலுக்குத்தான் சொந்தம் இல்லேன்னு மண்ணுக்குத்தான் சொந்தமாகணும் வேறே மனிதருக்குச் சொந்தமாவாது! மாமா! காதலுங்கிறது என்னுன்னு எனக்குத் தெரியாது ஆனு நீங்கதான் எனக்கு உசுரு சத்தியமாச் சொல்றேன் நீங்கா இல்லேன்னு நான் வெறுங் கட்டை!...மாமா!......

**வேல :**—பொறு செல்வி! உனது நன்மைக்காக எனது வாழ்க்கையை நான் சூனியமாக்கிக் கொள்வதா? என் வாழ்வைப் பற்றி நீ சிந்திக்க வேண்டாமா? தாத்தா உன்னை வளர்த்ததன் பயனு இது?

**சேல் :**—(மெதுவாக) இல்லே!...எனக்காக நீங்க...வாழ்வைக் கெடுத்துக்க வேண்டாம்...ஆனு...ஒங்கலுக்காக...நான்...

சோகித்து விழுகிறாள்)

**காட்சி 10**

(தோப்புக் கிணற்றிலிருந்து செல்வி
நீர் மொண்டு வருகிறாள்)

**சொக் :**—செல்வி! ஏது இருட்டுவதற்கு முன்னால் தண்ணிக்கு வந்து விட்டாய்?

**சேல் :**—அது எம்பிரியம்,

**சொக் :**—சரி, என் பிரியம் என்ன தெரியுமா? நீ குடத்தை இறக்கிவைக்க வேண்டுமென்பது. நானே இறக்கிவிடட்டுமா?

**சேல் :**—எசமான்! நானும் எத்தனையோ மொறை ஒங்களுக்கு புத்தி சொல்லியாச்சு. நீங்க திருந்தவல்லே. இனிமே நான் பொல்லாதவளாத்தானிருப்பேன். வீணு மானம் மரியாதையைக் கெடுத்துக்காதிங்க !

**சொக் :**—(சினந்து) என்னடி, ரொம்ப கோவிச்சுக்கிறே ! பெரிய மிட்டாதார் மகளாட்டமா? மகா பத்தினிதான்! இதோ செல்வி ! நான் எசமான் ! என் சொற்படி நடக்கவேண்டியவ ! முடியுமா முடியாதா?

**சேல் :**—முடியாது.

**சொக் :**—ஓஹோ ! மயிலே மயிலே என்றால் இறகு போடுமா ? மிட்டாதார் மகன் முட்டாள் இல்லை ! பார்க்கிறேன், உன் சமர்த்தை !

(அவள் கையைப்பற்றித் தலையிலி
ருக்கும் குடத்தைப் பிடிக்கிறான்)

**சேல் :**—(அஞ்சி) ஐயோ ! அக்ரமம் ! கேள்விமுறையில்லையோ ! ஐயய்யோ !

---

(இதன் தொடர்ச்சி 7.ம் பக்கம்)

# அஞ்சாதேடா!

(N. E. பாலகிரு)

நொண்டிச்சிந்து.

1. எதற்கும் நீ! அஞ்சாதேடா—தமிழா!
எந்த மலை பிளந்து விழுந்திடினும் (எ)

2. ஏய்ப்போரைக் கண்டுவிட்டால்—தமிழா!
இளம் சிங்கம் யென ஓடிஒழித்துவிடு (எ)

3. நீதியை நினைத்தேயிரு—என்றும்
நீள் வாளைக் கையிலேந்தி உலவச் செல்லு (எ)

4. விதியினைச் சொல்லுபவரைக்—தமிழா!
வீணரென்றுரைத்திடு செகத்தினிலே (எ)

5. பிறப்பாலே உயர்ந்தேன் என்று—எவனும்
பித்தத்தால் சொல்லிவிடில் நீ சேயென்று கூறு (எ)

6. தமிழ்த் தாயை இந்தியென்னும்—கெட்ட
தருதலை மணக்கவே எண்ணுகின்முன் (எ)

7. தலையினை அறுத்திடுவாய்—எந்தத்
தவமுனி வந்திடினும் கொன்றே நீ வெல்வாய் (எ)

8. மார்பினை மலைபோல் காட்டி—தமிழா!
மகிழ்ச்சிப்பண் பாடி நீ! நடந்து செல்லு (எ)

## திருமணம்

1—12—40ல் திருச்சி சீரங்கத்தில் புரட்சி கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தலைமையில் தோழர்கள் நடிகமணி D.V. நாராயணசாமி—பாப்பா அம்மையார் திருமணமும் நடிகச் செல்வன் ராஜேந்திரன்—பங்கஜம்மாள் திருமணமும் சிறப்புற நடைபெற்றன. தலைவரவர்கள் சீர்திருத்தத் திருமணத்தின் நோக்கத்தையும் நாட்டில் அதுபரவ வேண்டியதின் அவசியத்தையும் தெளிவாக எடுத்துக் கூறினர்.

பின்னர் தோழர்கள் T. P. வேதாசலம், E. V. K. சம்பத், C. N. அண்ணாத்துரை ஆகியோர் வாழ்த்துரை கூறினர். பல கழகங்களும் பல தனிப்பட்டத் தோழர்களும் தோழர் நாராயணசாமிக்கு வாழ்த்திதழ்கள் அளித்தனர். தஞ்சை K. R. இராமசாமியின் கிருஷ்ண நாடக சபை நடிகர்களும் மற்றும் திராவிட காங்கிரஸ், கம்யூனிஸ்டு இயக்கங்களைச் சேர்ந்த பலரும் மணமக்களுக்கு பரிசுகள் வழங்கினர். மணமக்களின் நன்றி கூறலுடன், மண விழா இனிது முடிந்தது. வெளியூர்களிலிருந்தும் உள்ளூர்களிலிருந்தும் ஷை வைபவத்திற்கு ஏராளமான தோழர்கள் வந்திருந்தனர்.

## ★ அறிவிப்பு ★

சென்ற வாரம் விடாது மழை பெய்ததால் பஸ் போக்குவரத்தில் தடை ஏற்பட்டதினுல், சென்ற கிழமை "உதயம்" வழக்கம்போல் அனுப்ப முடியாதுபோய் விட்டதற்கு பெரிதும் வருந்துகிறேம். இவ்வாரம் இரு கிழமை இதழ்களும் உங்களிடம் வருகிறன்ன. அன்புடன் ஏற்று தாமதத்திற்கு பொறுத்துக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறேம், இனிமேல் "உதயம்" ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கிடைக்கும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேம்.

—மானேஜர்.

---

# கோவை
# திராவிட இளைஞர் கழகம்

## விளக்கம்

**பெயர்**,—இக்கழகம் கோவை திராவிட இளைஞர் கழகம் (Y. M. D. A) என்று அழைக்கப்படும்.

**நோக்கங்கள்** :—திராவிட நாட்டு இளைஞர்களிடையே பகுத்தறிவை வளர்ப்பது. தமிழ் மொழி, இலக்கியம், கலை நாகரீகம் இவைகளின் மீது இளைஞர்களுக்கு ஆர்வமூட்டி அவர்களிடையே புத்துணர்வைப் புகுத்துவது. இவைகளுக்காக சொற்பொழிவுகள், உரையாடல்கள் நடத்துவது

**உறுப்பினர்கள்** :—பதினைன்கு வயதுக்கு மேற்பட்டவர்கள் இக்கழகத்தில் உறுப்பினராக விரும்புவோர் நுழைவுக் கட்டணம் அணு நான்கும், ஆண்டு சந்தா அணு எட்டும் செலுத்தவேண்டும்.

உறுப்பினர்கள் ஆண்டு தோறும் சந்தாவைத் தவணை தேதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் செலுத்திவிட வேண்டும். அப்படிச் செலுத்தத் தவறியவர்கள் தாமாகவே கழகத்திலிருந்து விலகியவராகக் கருதப்படுபர்.

கழகத்தில் உறுப்பினராக விரும்பும் ஒருவரை சேர்க்க மறுப்பதற்கும், உறுப்பினராகவிருப்பவரை காரணம் காட்டாது நீக்குவதற்கும் செயற் குழுவுக்கு உரிமையுண்டு.

**செயற்குழு** :—செயற்குழுவின் தலைவர், துணைத்தலைவர், இருசெயலாளர்கள், ஒரு பொருட்காப்பாளர், மற்றும் நான்கு அங்கினத்தினர்களும் இருப்பர். செயற்குழுவின் கூட்டத்திற்கு குறைந்தது ஐவர் இருத்தல் வேண்டும். இச் செயற்குழு மாதமொருமுறை கூடி கழக அலுவல்களைக் கவனிக்கும். செயற்குழுவின் உறுப்பினர் ஒருவர் தக்க காரணமின்றி செயற்குழுவின் மூன்று கூட்டங்களுக்குத் தொடர்ந்தாற்போல் வராவிடின் செயற்குழுவிலிருந்து தாமாகவே விலகியவராவர் அவரது இடத்தில் வேறு ஒரு உறுப்பினரை செயற் குழுவே நியமித்துக் கொள்ளலாம்.

கழகத்தின் எல்லாச் செயல்களுக்கும் செயற் குழுவே பொறுப்புள்ளது. கழகத்தின் நோக்கங்களைப் பரப்புவதற்கு எந்த விதமான நடவடிக்கையெடுக்கவும் செயற்குழுவிற்கு உரிமையுண்டு.

**நிதி** :—கழகத்தின நிதியை செயற்குழுவின் விருப்பம்போல் கழக நலனுக்கு செலவழிக்கலாம்.

**பொதுவிதிகள்** :—கழகத்தின் ஆண்டு விழா ஆண்டு தோறும் நடைபெறும், ஆண்டு கழகக் கூட்டத்தில் செயற்குழு தேர்ந்து அமைக்கப்படும்.

செயற்குழுவின் விருப்பத்தின் மீதும் கழகத்தின் இருபது உறுப்பினர்களின் வேண்டுகோளின் மீதும் கழகத்தின் அவசரக்கூட்டம் கூட்டப்படலாம்.

கழகத்தின் மொத்த உறுப்பினர்களில் நான்கில் ஒரு பகுதி வந்திருப்பின் கூட்டம் நடைபெறலாம். கழகத்தின் கூட்டங்கள் குறைந்தது ஒருவார முன்னறிவிப்பின் மீது தான் நடைபெறுதல் வேண்டும். முன்னறிவிப்பு எழுத்து மூலமாக ஒவ்வொரு உறுப்பினருக்கும் அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்** : T. V. சுப்ரமண்யம்.

**காரியதரிசி** : S. மீனாக்ஷிசுந்தரம்

கோழி கூவிற்று! வையம்,
கொண்டதோர் இருளைத், தங்க
மேழியால் உழுதான் அந்த
விரிகதிர்ச் செல்வன்; பின்னர்
ஆழிசூழ் உலகின் சாட்சி
அரும்பிற்று! முனைய விழ்ந்து
வாழிய வைய மென்று
மலர்ந்தது காலை வானம்!

—புரட்சிக்கவி பாரதிதாசன்

---


# உதயம்

மலர் 1 15—12—46 இதழ் 20


## என்று தீரும்...?

நாட்டில் கடந்த சில மாதங்களாக அமைதியின்மை நிலவி வருகிறது. அதிலும் வடநாட்டில் குறிப்பாக பம்பாய், வங்காளம், பீஹார் போன்ற மாகாணங்களில் மக்கள் உயிருக்கு எத்தகைய பாதுகாப்போ, நம்பிக்கையோ இருப்பதாக எண்ணுவதற்கில்லாமல் வாழ்ந்து வருகிறார்கள் என்றால் இதை யாராலும் மறுக்க முடியாது.

இதற்குக் காரணம் என்ன? ஒருவரை ஒருவர் நம்பாமலும் ஒருவரைக்கண்டு ஒருவர் அஞ்சியும் வாழ்ந்து வந்ததேயாகும். இதுவரை பிரிட்டிஷ் ஆட்சி இருந்து வந்ததினால் இருவரும் பாதுகாப்பு இருந்து வந்ததாக நம்பி வந்தார்கள். இப்பொழுது பிரிட்டிஷார் இந்நாட்டை விட்டு வெளியேறுவதாக சொல்லி வருவதாலும், ஆதிக்கங்களை யெல்லாம் இந்நாட்டவர்களிடம் படிப்படியாக மாற்றிவருவதினாலும், ஏற்கனவே ஒருவரை ஒருவர் பகைத்துக் கொண்டும் நம்பாமலும் வாழ்ந்து வந்தவர்கள் அதிகாரத்தை தங்கள் தங்கள் கையில் வைத்துக்கொள்ள கிளம்பி விட்டார்கள். இதன் பயன்தான் நாட்டில் இன்று காணப்படும் கலவரங்களும் கொலைகளுமாகும்.

இவ்வாறு ஒருவரை ஒருவர் பகைத்துக் கொள்ளவும், வெறுக்கவும் ஆன நிலைமை ஏன் ஏற்பட்டது என்பதை நாம் பலமுறை இவ்விதழில் விளக்கியுள்ளோம். ஆரிய மதம்—இந்து மதம் இந்நாட்டிலே தோன்றியதிலிருந்து வேறு மதத்தை தலையெடுக்கவே விடவில்லை. அவைகளை அழிப்பதிலே முனைந்து நின்றிருக்கிறது. சரித்திரத்தின் வாயிலாகவும் புராணங்களின் வாயிலாகவும் தெரிந்துகொள்ளலாம்.

அப்படியானால், இஸ்லாமிய மதம் இந்நாட்டில் இவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறதே 10 கோடி மக்களுக்குமேல் அம்மதத்தைச் சேர்ந்தவர்கள் இந்நாட்டிலே வாழ்கிறார்களே; இம்மதத்தை ஆரியம்—இந்து மதம் அழித்ததா, அப்படியிருக்க ஒருவரை ஒருவர் பகைத்துக் கொள்வோ வெறுக்கவோ அவசியமென்ன? என்றும் கேட்கலாம். உண்மையாகவே, இந்நாட்டின் சரித்திரத்தை ஊன்றிப் படித்துப் பார்ப்பார்களேயானால், இஸ்லாம் மதம் இந்நாட்டில் நிலைத்திருப்பதற்கும் வளர்ந்து வருவதற்கும் மொகலாய ஆட்சி இருந்து வந்ததேயாகும். இல்லாமல், ஆரிய தர்ம ஆட்சியிருந்து வந்திருக்குமேயானால் பௌத்த மதமும் ஜைன மதமும் அடைந்த கதியை அடைந்திருக்காது என்றுஎவர் தான் சொல்ல முடியும்?

மக்களின் அறிவு, ஒழுக்கம், ஆகியவை இந்நாட்டில் குறிப்பாக தென்னாட்டில் ஓரளவுக்காவது காணப்படுகிறதென்றால் இதற்குக்காரணம் பௌத்தமதமும், ஜைன மதமும் ஆகும். அவ்வளவு தூரம் மக்களின் உயர்வுக்காக பாடுபட்டு வந்த மதங்களை ஒழித்துவிட்டது ஆரியம் என்றால், மற்ற மதங்களை ஆரியம் விட்டு வைக்கும் என்று எவரால் தான் நம்பமுடியும்? அதிலும் இஸ்லாமிய மதத்திற்கும் ஆரிய அல்லது இந்து மதத்திற்கும் பகையும், துவேஷமும் அளவு கடந்து வளர்ந்து வந்திருக்கிறது. சரித்திரப் புத்தகங்களில் எழுதப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகளைப் பார்த்தாலே விளங்கும் நாம் சொல்வதின் உண்மை.

இந்த நிலையில் மக்களின் மனப்பான்மை வளர்ந்து வந்திருக்கையில், இதே தன்மையில் இருந்தால்தான் தங்களது ஆட்சி நிலைக்கும் என்று கருதிக்கொண்டு இத்தகைய மனப்பான்மை வளர்வதற்கு தூபமிட்டுக்கொண்டு பிரிட்டிஷ்காரன் வந்திருக்கையில் ஒருவரை ஒருவர் ஆள சம்மதிப்பார்களா? எனவேதான் இப்பொழுது நாட்டில் கொந்தளிப்பு இருந்து வருகிறது. இம்மனப்பான்மையில் மாற்றம் ஏற்படாமல் அரசியலில் எத்தகைய மாற்றம் ஏற்பட்டாலும் அது நிலைக்காது, பயனும் அளிக்காது.

ஏன் இவ்வாறு சொல்லுகிறோமென்றால், காங்கரஸ் இந்நாட்டின் அரசியல் விடுதலைக்காக தோன்றியதென்றாலும், முஸ்லிம்கள் ஆதியிலிருந்தே எதிர்த்து வந்திருக்கின்றனர். இதற்குக் காரணம், நாம்மேலே எடுத்துக் காட்டிய மனப்பான்மையேயாகும். காங்கரஸ் இந்நாட்டிலுள்ள 40 கோடி மக்களின் பிரதிநிதி என்று சொல்லிக்கொண்டு வருகிறது இந்நாட்டை ஆளத்தோன்றிய ஸ்தாபனமும் தான் தான் என்று சொல்லி வருகிறது. ஆனால் 10 கோடி முஸ்லிம்களும், 6 கோடிக்கு மேற்பட்ட ஆதிதிராவிட மக்களும், 4 கோடி திராவிட மக்களும் எதிர்த்து வந்திருக்கிறார்கள்—எதிர்த்தும் வருகிறார்கள்.

காங்கரஸ் வெறும் அரசியல் ஸ்தாபனமாக மட்டும் இருந்து வந்திருக்குமேயானால், எல்லாமக்களும் போதிய பிரதிநிதித்துவம் வகித்து வந்திருப்பார்களேயானால், மக்களுக்குள்ளிருந்த அச்சத்தையும் அவநம்பிக்கையையும் போக்கக் கூடிய முறையில் நடந்து வந்திருக்குமேயானால், இன்று நாட்டில் இத்தகைய நிலைமை ஏற்பட்டிருக்காது என்று நிச்சயமாகக் கூறுவோம் துரதிர்ஷ்டவசமாக காங்கரஸ் இதற்கு நேர்மாறான முறையிலே வளர்ந்து வந்திருக்கிறது. காங்கரஸ் இந்து மதத்தைக் காப்பாற்றும், ஒரு ஸ்தாபனம் என்றும் இந்துக்களின் நன்மைதான் முக்கியமானதாகக் கருதி வருகிறது என்றும் நம்பும்படி அதன்போக்கு இருந்து வந்திருப்பதை எவராலும் மறுக்க முடியாது. இந்த நிலையில், இந்து மதத்தை ஆரிய மதத்தை ஒப்புக்கொள்ளாதவர்கள் எவ்வாறு காங்கரசின் ஆதிக்கத்தின் கீழ் இருக்க ஒப்புக்கொள்வார்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

இது வரை அதாவது பிரிட்டிஷார் இந்நாட்டை ஆளத்துடங்கியதிலிருந்து, தங்கள் நாட்டு சட்டப்படி

யும், அந்தந்த மதச்சட்டத்தின் படியும், ஆட்சி நடத்திவருகிறார்கள் இனி நாட்டில் நடக்கப்போகும் ஆட்சி ஜனநாய ஆட்சி என்று சொல்லப்படுகிறது. இவ்வுபகண்ட முழுமைக்கும் ஒரே ஆட்சி ஜனநாயக முறைப்படி நிறுவுவதென்றால், காங்கரசில் இன்றுள்ள முறைப்படி பார்த்தாலும் சரி. மொத்தத்தில் மக்கள் எண்ணிக்கைப்படி பார்த்தாலும்சரி இந்துக்கள் தான் ஆட்சி நடத்துவார்கள். இதை இந்துமதத்தை—ஆரியத்தைக் கண்டு அஞ்சி வாழுபவர்கள் எவ்வாறு ஏற்றுக் கொண்டிருக்க முடியும்?

இன்று இந்நாட்டில் நடைபெறும் ஆட்சி முறையும் எல்லை அமைப்பு முறையும் பிரிட்டிஷாரால் அவர்களது சௌகரியத்தை முன்னிட்டு ஏற்பட்டதாகும். அந்த அமைப்பின் காரணமாகவே இன்று இந்தியாவுக்கு மத்திய சர்க்கார் என்று ஒன்று இருந்துவருகிறது. அது போலவே என்றும் இருந்துவர வேண்டும் என்ற நியதியில்லை பிரிட்டிஷ் இந்தியாவைத் தவிர 500-க்கு மேற்பட்ட சுதேச சமஸ்தானங்கள் இருந்து வருகின்றன. அன்று எவ்வளவு சமஸ்தானங்கள் தனித்தனி இராஜ்யங்கள் இருந்து வந்திருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள், அன்று அவைகள் ஆட்சி நடத்திவரவில்லையா? அதுபோலவே, இன்றும் இப்பரந்த நிலப்பரப்பில், மக்கள் தனித்தனி பிரிவினர்களாக தனியாகவோ கூட்டாகவோ தங்கள் தங்கள் ஆட்சியை நிறுவிக் கொள்கிறோமென்றால் இதை ஏன் ஆட்சேபிக்க வேண்டும்?

இப்பொழுது பிரிட்டிஷ் மந்திரி சபையின் தூதுகோஷ்டியினர் அளித்த அறிக்கையின்படி அரசியல் நிர்ணய சபை கூட்டப்பட்டிருக்கிறது பிரிட்டிஷ் மந்திரிசபையின் தூதுகோஷ்டியினர் அரசியல் நிர்ணய சபை சம்பந்தமாக வெளியிட்ட அறிக்கை எலிக்கு வாலும் பூனைக்கு தலையும் காட்டக்கூடிய நிலையிலிருந்துவருகிறது. காங்கரஸ் விரும்புவதுபோல் இவ்வுபகண்ட முழுமைக்கும் ஒரே ஆட்சி நிறுவுவதற்கும் முஸ்லிம்கள் விரும்புவதுபோல் தனித்தனி இராஜ்யங்கள் நிறுவுவதற்கும் அதாவது பாகிஸ்தான் நிறுவுவதற்கும் இடமளிக்கக் கூடியதாகயிருக்கிறது. இதில்தான் இப்பொழுது தகராறு இருந்து வருகிறது.

அரசியல் நிர்ணயசபை என்பது இவ்வுபகண்டம் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து விலகியதும் இங்கு எத்தகைய அரசியல் அமைப்பு முறை இருக்க வேண்டும் என்பதை வகுக்கும் ஒரு சபையாகும். காங்கரஸ்காரர்கள் தங்கள் இஷ்டம்போல் இந்தியா முழுமைக்கும் ஒரே ஆட்சி ஏற்படக் கூடிய முறையில் அரசியலமைப்பு வகுக்க வேண்டுமென்று விரும்புகிறது. முஸ்லிம்லீக், விரும்பினால் தனித்தனி நாடுகள் அமைத்துக்கொள்ள தக்க விதமாக அரசியலமைப்பு இருக்க வேண்டும் என்று விரும்புகிறது இன்னும் தெளிவாகச் சொல்லப் போனால், பிரிட்டிஷ் மந்திரி சபையின் தூது கோஷ்டியினர் பிரித்தப்படி அரசியல் நிர்ணய சபையே A. B. C. என்ற தொகுதிகளாகப் பிரிந்து, அந்தந்த தொகுதிக்குட்பட்ட பிரதேசங்களில் எத்தகைய அரசியலமைப்பை நிறுவுவது என்பதாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறது இதற்கு காங்கரஸ் இணங்கவில்லை இப்பொழுது காங்கரஸ் அங்கத்தினர்களும் அவர்களால் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் அங்கத்தினர்களும் கூடிய அரசியல் நிர்ணயசபைதான் இன்று நடந்து வருகிறது. முஸ்லிம்லீக் பிரதிநிதிகளும் சமஸ்தான பிரதிநிதிகளும் இன்னும் கலந்துகொள்ளவில்லை.

காங்கரஸ் தலைவர்களையும் முஸ்லிம்லீக் தலைவர்களையும் லண்டனுக்கு அழைத்து விவாதம் நடத்திய பிரிட்டிஷ் மந்திரிசபையும் தகராறான பிரச்சனைக்கு விளக்கம் கூறிவிட்டது.

அரசியல் நிர்ணய சபைப்பிரிவுகளிலுள்ள பிரதிநிதிகளின் சாதாரண மெஜாரிட்டி ஓட்டுகளால் ஏற்பட வேண்டும் என்பதுதான் முதலிலிருந்தே மந்திரிசபைத் தூதுகோஷ்டியின் கருத்தாக இருந்துவருகிறது என்றும் பிரிட்டிஷ் சர்க்கார் சட்டநிபுணர்களின் அபிப்பிராயமும் இதையே ஆதரிப்பதாக இருப்பதாகவும் பிரிட்டிஷ் சர்க்கார் வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது.

ஆனால் காங்கரஸோ "தொகுதிகளில்சேரும் விஷயத்திலும் தங்கள் அரசியல் திட்டத்தை வகுத்துக் கொள்வதிலும் மாகாணங்களுக்கே உரிமை இருக்கிறது. மொத்தமாகப் பார்த்தால் பிரிட்டிஷ் அறிக்கையின் உண்மை அர்த்தம் இதுதான்"

என்று கூறிவருகிறது. இவ்வாறு அவரவர்கள் விரும்புவதுபோல் மணக்கும்மனோரஞ்சிதபூபோல் அறிக்கைகளை வெளியிடுவதில் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் வெகு சாமர்த்தியசாலிகள் என்பதைத்தான் இவ்வறிக்கை விளக்குகிறதே யல்லாது உருப்படியான காரியத்தைச் செய்யும் ஆற்றல் பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளுக்கு உண்டென்பதை ஒரு துளியும் விளக்கவில்லை. இவ்வாறு எங்கும் சாமர்த்தியமான அறிக்கைகளை வெளியிட்டு தகராறுகளை கிளப்பிவிட்டுக்கொண்டே தங்கள் காரியத்தை சாதித்துக் கொள்ள முடியுமென்று பிரிட்டிஷ் சர்க்கார் நினைத்து வருமேயானால் இது அதிக நாளைக்கு நிலைக்காது என்பதை உணருங்காலம் நெருங்கி வருகிறது. அது எப்படியோ ஒழியட்டும். நம் நாட்டவர்களாவது நாட்டின் நிலைமையை யுணர்ந்து நடந்து கொள்ள வேண்டாமா?

தனித் தனியாக பிரிந்து இருக்க வேண்டுமென்று அதாவது தனி இராஜயங்களாக இருக்க வேண்டுமென்று அந்தந்த பகுதிகளிலுள்ள மெஜாரிட்டி மக்கள் விரும்பினால் அந்தப்படியே அமைத்துக்கொள்ள அனுமதிப்பது தான் புத்திசாலித்தனமான காரியமாகும் அதை விட்டுவிட்டு அவர்கள் விருப்பத்திற்கு மாறாக அரசியலமைப்பை வகுத்து அதை பலாத்காரமாக புகுத்த நினைத்தால் நாட்டில் உள்நாட்டுக் கலகம் ஏற்படும் என்பதில் ஒரு சிறிதும் சந்தேகங்கொள்ள வேண்டியதில்லை அவ்வாறு செய்யத் துணியும்போது பிரிட்டிஷ் சர்க்கார் இவர்களுக்குஎதிராகவுள்ளவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் துணைபுரியும் அப்பொழுது பிரிட்டிஷ் பிடிப்பு அடியுடன் அறுந்து போகாத நிலைமை ஏற்படும் இந்த நிலை ஏற்படவிடலாமா? நாமே நமக்குள் தகராறு இல்லாமல் தனித்தனியாக பிரிந்து வாழலாமா? எது நல்லது என்பதை முடிவு செய்ய வேண்டிய பொறுப்பு பொது மக்களின் கையில் தானிருக்கிறது தலைவர்களை சரியான பாதையில் நடத்திச்செல்ல வேண்டியது பொது மக்களாகும் ஆகவே பொது மக்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும்

## நகர சபைகளின் ஆயுள் நீடிப்பு

இவ்வருஷம் டிசம்பர் 21-ந்தேதியுடன் சாதாரணமாக முடிவடையும் கீழ்கண்ட நகர சபைகளுடைய கவுன்சிலர்களின் பதவிக் காலத்தை 1947 மார்ச்சு 1-ந்தேதி வரை சென்னை சர்க்கார் நீடித்துள்ளது. நகர சபைகளாவன :—

பெஜவாடா, பாலக்காடு, மங்களூர், கள்ளிக்கோட்டை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், பாலக்கோல், கூடலூர், விருதுநகர், பெத்தாபுரம், போடி நாயக்கனூர், நெல்லூர், திண்டுக்கல், மதுரை, பழனி, தஞ்சாவூர், ராஜமஹேந்திரபுரம், அசோனி, காக்கினாடா, ஹிந்துப்பூர், திருப்பதி, விஜயநகரம், அனந்தப்பூர், தெனாலி ஆகியன.

1920ம் வருஷத்திய சென்னை ஜில்லா முனிஸிபாலிடிகள் சட்டத்தின்படி அமைக்கப்பட்டுள்ள எல்லா முனிஸிபாலிடிகளது ஆயுட் காலத்தையும் 1947 மார்ச்சு முதல் தேதிவரை நீடித்திருப்பதாக சர்க்கார் ஒரு பொது உத்தரவும் அனுப்பியுள்ளது.

## கரூர் கலக வழக்கு

கரூர் கலவர வழக்கில் சம்பந்தப்பட்ட 77 பேர்களில் தோழர்கள் கே. ராமசாமி நாயுடு, எஸ். மாசிலாமணி கவுண்டன், ஆர். ஷண்முகம் பிள்ளை ஆகிய நால்வரும் சென்னை ஹைகோர்ட்டாரால் சென்ற 3—12—46ந் தேதி ஜாமீனில் விடுதலை செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பூர்வாங்க விசாரணை சம்பந்தமாக கோர்ட்டுக்கு வருவது தவிர பூர்வாங்கவிசாரணை முடியும் வரையில் திருச்சி ஜில்லாவில் இவர்கள் பிரவேசிக்கக் கூடாது என்று நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது.

★ ★ ★

ஷை வழக்கு, பொன்மலைக்கலகம் விஷயமாய் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஸ்பெஷல் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் தோழர் ஜே. பெரியநாயகம் முன்னிலையில விசாரணைக்கு 9—12—46-ல் எடுத்துக்கொள்ளப்பட்டது.

சென்னை பப்ளிக் பிராசிகூடர் தோழர் வி. எல். எதிராஜ் பிராசிகூஷன் தரப்பில் விவாதத்தைத் துடங்கினர்.

சப்டிவிஷன் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் ஜனுப் அப்துல்ரகீம். அவர்கள் பிராசிகியூஷன் தரப்பில் முதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.

அடுத்தபடியாக கரூர் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் தோழர் கே. ராமன் அடுத்த சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.

இவ்வழக்கைத் தொடர்ந்து பிராசிகியூஷன் தரப்பில் சென்னைப் பப்ளிக் பிராசிகூடர் தோழர் வி. எல். எதிராஜும் உதவியாக திருச்சி வக்கீல் என், ஹாலாசியமும். நடத்துகின்றனர்.

எதிரி தரப்பில் ராவ் சாகிப் எஸ். சுயம்பிரகாசம், ராவ் சாகிப் எம். கே. ஆனந்தர், ஒய் நடராஜ ஆனந்தர், சங்கரன், ஆகியவர் வந்திருந்தார்கள்.

# அங்கு புதிய மில்கள்! ★

# ★ இங்கு மில் ஒழிப்பு!!

——— [o] ——— —

சென்னை மாகாண பிரதமர் தோழர் பிரகாசம் காரு, வெளியிட்டிருக்கும் மில் ஒழிப்புத் திட்டத்துக்கு விளக்கம் கூறுகையில், காங்கிரசின் கதர் திட்டத்தை அமல் நடத்துவதற்காகவே, மில் ஒழிப்பு திட்டம் கொண்டு வந்திருப்பதாக குறிப்பிட்டிருந்தார். காங்கரசின் கதர் திட்டத்தை அமல் நடத்துவதில் ஒரு சிலர் ஒரு திட்டமும் மற்றும் சிலர் வேறு திட்டமும் மேட்கொள்வது ஒழுங்கு முறையுமாகாது விவேகமுமாகாது.

ஏன் இவ்வாறு சொல்லுகிறோமென்றால், இந்தியாவில் வங்காளம், சிந்து, பஞ்சாப் போன்ற இரண்டு மூன்று மாகாணங்களைத் தவிர இதர மாகாணங்களில் எல்லாம் காங்கரஸ் மந்திரிகள் தான் பதவி வகித்து வருகிறார்கள். இவர்கள் யாவரும் இன்று ஒரே கொள்கையை அனுசரிப்பதாக தெரியவில்லை யென்பதற்காகத்தான் சென்னை மாகாணமும் காங்கரஸ் மந்திரிகளைக் கொண்டது தான். ஐக்கிய மாகாணமும் காங்கரசைக் கொண்டதுதான். அப்படி யிருந்தும், இவ்விரு மந்திரி சபைகளுக்குள்ளும் கதர் திட்டத்தை அமல் நடத்துவதில் வேற்றுமைகள் இருந்து வருவதைக் காணலாம்.

சென்னை காங்கரஸ் மந்திரிகள், கதர் திட்டத்தை அமலில் கொண்டு வருவதற்காக மில்களை ஒழிக்கப் போவதாகக் கூறுகிறார்கள்.

ஐக்கிய மாகாண காங்கரஸ் மந்திரிகள் என்றாலோ,

"ஐக்கிய மாகாணத்தில் போருக்குப் பின் போதுமான துணி கிடைக்கவில்லை. மக்களின் எண்ணிக்கை மூன்றில் ஒரு பங்கு அதிகமாகி விட்டது.

ஆகையால் குறைந்த நம்பர் நூல்களை நூற்பதற்காக மாகாணமெங்கும் புதிய புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்காக முதலாளிகளுக்கு வேண்டிய உதவி செய்வதில் ஐ. மா. சர்க்கார் முனைந்திருக்கிறது.

இதுவரை துணி உற்பத்தி முழுதும் கான்பூரிலேயே இருந்து வருகிறது.

ஆனல் இம்மந்திரி சபை மீரத் கோராக்பூர் வரையில் சுமார் ஆறு புதிய மில்களை ஏற்படுத்துவதற்குத் திட்டமிட்டிருக்கிறது. இவைகளில் 25,000 கதிர்களும் 500 தறிகளும் இருக்கும்."

என்று அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். இதிலிருந்து இன்று சென்னை காங்கரஸ் மந்திரிசபைகூறும் சமாதானம் ஒரு பொதுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டதல்ல என்பது .விளங்கும். இத்திட்டம் ஏதோ உள் நோக்கத்தோடு தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை இனியாவது பொதுமக்கள் உணர வேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

———

வெள்ளை, வெட்டை முதலிய உஷ்ண வியாதிகளுக்கு
எங்கும் பிரசித்தி பெற்ற

**இராஜாளி எண்ணை**

எந்த மருந்தினாலும் தீராத நாள்பட்ட வெள்ளை, வெட்டை, மஞ்சள், ரத்தசீழ், வெள்ளை, நீரடைப்பு, நீர் கடுப்பு, நீர் எரிச்சல், நீர் எரிவு, நீரிழிவு, ஆண்குறி நரம்புவலி, வீக்கம், சொரி, சிரங்கு, ஊரல், படை, கிரந்தி, புண், கைகால் பிடிப்பு, தந்திசூலை, நாபிரணம், கெற்பரணம், முதலிய மிக கொடிய மேக வியாதிகளை மறுமுறை வாராதபடி வேரற நீக்கக் கூடிய மருந்து. இதற்கு நிகர் வேறு இல்லை. குறைந்த விலை நிறைந்த குணம்..

**பூர்ண குணத்திற்கு உத்திரவாதமுள்ளது புட்டி 1-க்கு ரூ. 2—0—0**

தயாரிப்பவர் :
சித்தவைத்திய பண்டிட் **S. V. இராஜரத்தினக் கவுண்டர், R. I. M. (P)**

சேர்மன் தம்மண்ண செட்டி ரோட், அரிசிப்பாளையம், சேலம், S. I.

### உதயம்

சந்தா விபரம்:

உள்நாடு:-

| | |
|---|---|
| வருடச்சந்தா ரூ | 5—0—0 |
| 6 மாதச்சந்தா ரூ | 2—8—0 |
| தனிப்பிரதி ரூ | 0—1—3 |

வெளிநாடு:-

| | |
|---|---|
| வருடச்சந்தா ரூ | 7—0—0 |
| 6 மாதச்சந்தா ரூ | 4—0—0 |
| தனிப்பிரதி ரூ | 0—1—6 |

மானேஜர்,
"உதயம்"
திருவத்திபுரம். N.A.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

(தலையிலிருந்த குடம் கீழே விழுகிறது. அவ்வழியே வந்த வேலன் ஓடிவந்து, சொக்கலிங்கத்தின் கழுத்தைப் பிடித்து நெட்டுகிறான்).

**வேல :**—(கோபத்தோடு) மதியற்ற முண்டமே! என்ன கொழுப்பு உனக்கு? ஆறறிவு படைத்த மனிதனா நீ! மிருகம்!

**சொக் :**—அடேய்! வேலா! என்னையா கழுத்தைப் பிடித்து நெட்டுகிறாய்? என்னையா?...

**வேல :**—ஆம்! உன்னைத்தான், அயோக்கியப்பதரே!

**சொக் :**—எஜமானத் துரோகி! பாவி!...

**வேல :**—துரோகத்திற்கு அர்த்தம் தெரிந்து கொள்ளாத எஜமானரே! யார் துரோகி? தனது வேலையாட்களை மனிதராக மதிக்காதவன் துரோகி! பணத்திமிரால் பகுத்தறிவை இழப்பவன் துரோகி! மணந்தவளிருக்க மாற்றாளை இச்சிக்கிறவன் துரோகி! கலியாணமாகாத கன்னியைக் கைப்பிடித்திழுப்பவன் துரோகி!

**செல் :**—முழிக்கிற முழியைப்பாரு! ஆந்தை மாதிரி!

**சொக் :**—(பெருமூச்சு) உம்...என்ன தைரியம்...!

**வேல :**—எஜமானர்! அடிநாள்தொட்டு அந்தியகாலம் வரை உங்கள் சுக வாழ்வைப் பெருக்கிக் கொள்ளத் தன் உழைப்பையும் உயிரையும் கொடுத்த வீரப்பன் சந்ததிக்கு நீ, காட்டும் கௌரவமா இது?...மலத்திற்கும் சாணத்திற்கும் பேதம் தெரியாத மடையன்! மிட்டாதார் வயிற்றில் நீ யேன் பிறந்தாய்? முட்டாள்!

**சொக் :**—நாவையடக்கிப் பேசு! கூலிக்கார வேலா! ஆழம் தெரியாமல் காலை விட்டுவிட்டாய், இந்த அவமானத்திற்குப் பழிக்குப்பழி வாங்காவிட்டால், நான் மிட்டாதார் பொன்னம்பலத்தின் மகனல்ல! பார்க்கிறேன்.

**வேல :**—பார்ப்பதென்ன! இப்பொழுது பார்த்துக்கொள்வது! உம்...இதோ...!

(அருகில் போகிறான்)

**செல் :**—(தடுத்து) வேண்டாம் மாமா! நல்ல மனுசனுக்கு ஒரு வார்த்தை, நல்ல மாட்டுக்கு ஒரு சூடு! புத்தியிருந்தா பொழச்சுப்போவுது. விட்டுடுங்க...இது எசமான் காதுக்குப் போனாக் கூட நல்லாருக்காது, வேண்டாம்.

(சொக்கலிங்கம் கருவிக்கொண்டே போகிறான்)

## காட்சி 11.

(குடிசையில் வேலன் பாடிக்கொண்டிருக்க, மரகதம் வருகிறாள்)

**மரக :**—(வெளியில் நின்று) செல்வி! செல்வி!!

**வேல :**—(பாடுவதை நிறுத்தி) யாரது?

**மரக :**—(உள்ளே வந்து) நான்தான்...! செல்வியிருக்கிறாளா? பாட்டு ஏன் நின்றுவிட்டது?

**வேல :**—செல்வி இங்கில்லையே, வெளியே போயிருக்கிறாள், செல்விதானே வேண்டும்?

**மரக :**—இல்லை உங்கள் பாட்டுந்தான், பாடுங்கள். ஒரு பாட்டாவது கேட்டு விட்டுப் போகிறேன்! பசித்துவந்த எனக்கு இசையமுது கிடைக்காதா? அவ்வளவு வன் கண்ணரா நீங்கள்?

**வேல :**—பரிமாரக் காத்திருக்கிறேன். தாராளமாக!... இப்படி உட்காரலாமே!

**மரக :**—ஓ! கட்டளை.

(மரகதம் உட்கார, வேலன் பாடுகிறான்)

"காதல் அடைதல் உயிரியற்கை!—அது
கட்டில் அகப்படும் தன்மையதோ?—அடி
சாதல் அடைவதும் காதலிலே—ஒரு
தடங்கள் அடைவதும் ஒன்று கண்டாய்?

**மரக :**—"காதல் அடைதல் உயிரியற்கை"...இசையும் பொருளும் நிறைந்த இன்ப கீதம்! புரட்சிக் கவிஞரின் கருத்தோவியம்! வேலா! இது வெறும் பாட்டல்ல...!...என் இதயக்குரலின் எதிரொலி! இயற்கையின் ஆற்றல்!

**வேல :**—அப்போ, இந்தப் பாட்டு உனக்குப் பாடமிருக்கிறதென்று தெரிகிறது.

**மரக :**—பாடம் மட்டுமல்ல, என் இதயத்தில் ஆழப் பதிந்து போயிருக்கிறது. இன்று வாழ்விலும் எதிரொலிக்கிறது! ஆம்! நான் துயிலும் பொழுதுகூட என்வாய் உச்சரிக்கும் "காதல் அடைதல், உயிரியற்கை" என்பதை!

**வேல :**—நான் எதை அதிகமாக விரும்புகின்றேனோ, அதையே நீயும் விரும்புகின்றாயே! காரணம்?

**மரக :**—ஒன்றுபட்ட மனப்பான்மை! வேலா! நமது இந்த மனப்பான்மை இன்று நேற்று வந்ததா? குழந்தைப் பிராயமுதல் கொம்பும் கொடியுமாக பின்னிக்கொண்டு வளர்ந்ததல்லவா இது?

**வேல :**—ஆம்! நமது இளமைக் கனவுகள் இன்பகரமானவை! சமத்துவச்சாரலில் முளைத்தவை!...வேலா! கொம்பு வளர்ந்தது கொடியும் செழித்தது, ஆனால்...

**மரக :**—ஆனால்?...

**வேல :**—பூத்துக் காய்க்கும் பருவத்தில் புயலுக்குத் தப்ப வேண்டுமே!

**மரக :**—உள்ளத்தில் உறுதிமட்டுமிருந்தால் கடும் புயலைத் தென்றலாக்க முடியும், முள்ளணையை மலர் மஞ்சமாக்கவும் முடியும், ஆனால், உன் மனம்...

**வேல :**—உறுதியாகத்தானிருக்கிறது, என்றாலும் மாகதம்! நீ யார்? உன் நிலை யென்ன? நான் யார்? என் நிலை யென்ன? என்பவைகளை நினைக்கும்பொழுது என் மனம் இற்றுவிடும் போலிருக்கிறதே! என செய்வேன்!

**மரக :**—அதெல்லாம் வீண் கற்பனை வேலா! நம் இருவர் நிலையும் ஒன்றுதான்! நீ வீரன், ஆண்சிங்கம், கலைஞன், கலைக் காதலன்! நான்...காதலி...இங்கு எந்த வேற்றுமைக்கும் இடமில்லை!

**வேல :**—இருக்கிறது மாகதம்! நீ கடல் மீன், நான் கானகத்துப் மறவை! இடமோ வேற்றுமைக் கனல் வீசும் பாலைவனம்!...

**மரக :**—இருந்தாலென்ன?

**வேல :**—கடல் மீனும் கானகத்துப் பறவையும்கூடி பாலை வனத்தில் வாழுமா?

**மரக :**—வாழும், காதலொன்றுமட்டுமிருந்தால்,

**வேல :**—காதல்! மயிலாடக்கண்ட வான் கோழி சிறகு விரித்தது போலாய் விட்டால் என்ன செய்வது மரகதம்?

**மரக :**—போதும்! போதும்!!...என் மனதை இப்படிப் புண்படுத்த வேண்டுமென்று எத்தனை நாளாகக் காத்திருந்தாய்? (வருந்தி) வேலா! எனக்கேன் இக் கடுந்தண்டனை? என் மனதை நீ யறியமாட்டாயா?

(தொடரும்)

# பெருச்சாளியும் பெருங்குடி மக்களும்

(அநுமந்தன்பட்டி பெ. நல்லசாமி)

தலைப்பைப் பார்த்ததும் திடுக்குற வேண்டாம் ஓர் உண்மை நிகழ்ச்சியையே தீட்டுகிறேன்.

ஓர் இரவு நம் இயக்கத் தோழர் ஒருவருடன் என் அறையில் உரையாடிக் கொண்டிருந்தேன். பக்கத்து அறையிலிருந்து "தர்புர்" என்ற சத்தம் கேட்டது.

என் தாயார், 'நல்லசாமி! இந்தப்பெருச்சாளிகளின் தொந்தரையைச் சகிக்கவே முடியவில்லை. இவைகளை எப்படியாவது ஒழிக்க வேண்டுமடா," என்று கட்டளை இட்டார்கள்.

உடனே எழுந்தேன். கம்பைக்கையிலெடுத்து பெருச்சாளிகளை ஒழிக்கக் கிளம்பினேன். தோழர் இராஜகோபால், "கொஞ்சம் ! பொறுங்கள் மிஸ்டர் ஒரு சிறு தந்திரம் செய்யலாம்," என்றார்.

"என்ன?" என்றேன் நான்.

"பெருச்சாளிகளை அடிப்பதற்கு ஒரு எளிய வழி உளது. ஒரு "டார்ச் லைட்" எடுத்துக்கொள்ளுங்கள் டார்ச்சை தீடிரென ஏற்றினால் கண்பார்வை கெட்டு கலங்கி நிற்கும், காரியம் எளிதில் கைகூடும், என்றார்.

"சபாஷ்! நல்ல யோசனை!" என்று சொல்லி ஒரு டார்ச் லைட்டை எடுத்து அவர் கையில் கொடுத்து நான் கையில் கம்புடன் இருவருமாக அறைக்குள் நுழைந்தோம்.

நுழைந்ததும் "பளீர்" என்று மின் விளக்கை ஏற்றினார் என் தோழர், ஒளிக்கிரணங்கள் பெருச்சாளிகளின் முகத்தில் விழுமாறு செய்தார், பலிக்கவில்லை எங்கள் சூழ்ச்சி பாய்ந்தோடி மறைந்தன பழம் பெருச்சாளிகள்.

"என்ன தோழரே!" என்றேன்.

"இது பகுத்தறிவு காலம் மிஸ்டர்! பெருச்சாளிகளும் காலத்திற்கேற்ப கருத்துகள் கொண்டுள்ளன," என்றார் அவர்.

"விளங்கச் சொல்லுமையா" என்றேன் நான்.

விளக்குவதற்கு இதில் என்ன இருக்கிறது, எங்கள் வீட்டில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இவ்விளக்கினுதவியால் பெருச் சாளிகளை அடித்துக்கொன்றிருக்கிறேன். அதே முறையை இங்கும் கையாள நினைத்தேன். "நின்றால் நீர் மூலமாவோம்; கண்ணை மூடி எங்காகிலும் ஓடியாவது மறையலாம் என ஓடி விட்டன. அவைகளும் அறிவுவளர்ச்சியை அடைந்துவிட்டன," என்றார்.

சிரித்துக்கொண்டே என் அறைக்கு வந்தோம்.

தோழர் "போய் வருகிறேன்," எனச் சொல்லி விடை பெற்றுக்கொண்டார். பெருச்சாளியைப் பற்றிய சிந்தனையிலிருந்த நான் பெருங்குடி மக்களைப்பற்றி நினைக்கலானேன்.

"ஏற்றியது மின் விளக்கு! நம்மை நிர்மூலம் செய்ய ஓர் சூழ்ச்சி. கண்கலங்கி நிற்பதில் காரியமில்லை. கண்மூடி காத வழி ஓடுவதே காத்துக்கொள்ளும் மார்க்கம்," என்றோடின பெருச்சாளி. கருத்தில் பட்டதைக் காரியத்தில் காட்டின.

பழங்குடி மக்களே! பெருங்குடித் தோன்றல்களே! போற்றுமின் பெரிச்சாளிகளை. அவை நம்மைவிட பகுத்தறிவு பெற்றுவிட்டன. அதனால்தான் "போற்றுமின்," என்கிறேன் நாம் ஆரிய அணைப்பில் அகமகிழ்ந்து அழிவுறுகிறோம். அறிவுக்கண் கொண்டுபாருங்கள். ஆரியமின் விளக்கு நம் முகம் நோக்கி பிரகாசிக்கிறது. பெரிச்சாளிகளுக்கு மின் விளக்கை பற்றிப் பிடுங்க ஆற்றலில்லை. அதனால் ஓடி மறைந்தன உயிர்காக்க எண்ணி. நமக்கு அறிவிருக்கிறது. ஆற்றல் இருக்கிறது. ஆரிய மின்விளக்கை அணைக்கும் திறன் உளது. பின்னர் ஏன் இந்த நிலை பேதமை! பேதமை என்பதே பெரும் உண்மை. நம்மிடமிருக்கும் பகுத்தறிவுப் பெரும் விளக்கின் முன்னர் ஆரிய மின் விளக்கு சூரியன் முன் மின் மினி போலு!! ஆம்! நினைவிலிருக்கட்டும். ஆரிய மின் விளக்கொளியில் மயங்காதீர். நம் அறிவு விளக்கை ஏற்றுங்கள். அழியும் ஆரிய மின் விளக்கின் ஒளி.

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

யைப் பாடி இறுதியாக அவினசியார் கூறியவைகள்தான் மேலே சொன்னவை மார்க்கம் கூறினார் என மகிழ்ச்சி யடைந்தோம் ஆனால் மந்திரியார் காட்டிய மார்க்கம் இந்த நாட்டு மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு தோல்விமேல், தோல்வி அடைந்து வருவது.

எந்த சக்தியைக் குறித்து இயம்பினாரோ நாம் அறியோம் ஆனால், அமெரிக்கா அணுசக்தியை அடைந்தது அவினாசியார் காட்டிய ஆண்டவன் வழிபடு மார்க்கத்தினால் அல்ல அறிவினால். ரஷ்யா புது சக்தியைப் பெற்றது கடவுளின் கடாட்சத்தினால் அல்ல கருத்தின் செறிவினால். அவினாசியார் இதை அறியாமல் இருக்கமுடியாது. ஆயினும் கூறினார் கலைஞர்களின் கண்யத்தைக் கூறி, அறிவின் திறனைப் பற்றி பேசி, "எல்லோரும் உயர்ந்த சக்தி பெறவேண்டும் அதற்கு எல்லோரும் கல்வி பெறவேண்டும்" என மந்திரியார் மார்க்கம் காட்டியிருந்தால் மகிழ்ச்சியுடன் வரவேற்றிருப்போம். ஆனால் ஏமாந்தோம்.

எனவே, கல்வி மந்திரியாரின் "காலாட்சேப மார்க்கம்" மக்களுக்கு சக்தியை அளிக்காது. ஆனால் அழிக்கும் என்கிறோம். (ஒரு நிருபர்)

முந்துங்கள் ! முந்துங்கள் !!

இன்றே ஆர்டர்களுக்கு முந்துங்கள் !!!

எங்கும் புகழ்பெற்ற N. K. P. வேல் அவர்களால் டைரக்ஷன் செய்யப்பட்ட சாயத்தொழில் நிபுணர்களால் பரிசோதிக்கப்பட்டு மேல் நாட்டின் தயாரிப்பைக் காட்டிலும் உயர்ந்தவை என்ற உத்திரவாதத்துடன் அனுப்பப்படுவது?

'சாயத் தொழிலுக்கு முதன்மை பெற்றது.

செல்வம் டர்க்கிரெட் ஆயில்கள் அண்டு நெப்தால் சோப்

ஒரே மணி நேரத்தில் நூல் நனைந்து நன்றாய் ஊறிவிடும். அப்பொழுதே சாயங்கள் தீர்க்கலாம். சாயம் தீர்க்கப்பெற்ற நூல் மிருதுவாகவும், பாலீஷாகவும் இருக்கும்.

இண்டாந்திரியன் முதல் நெப்தால் வரை உபயோகப் படுத்தலாம். எவ்விதபரீக்ஷைக்கும் உத்திரவாதமுள்ளது. விலை விபரங்களுக்கு எழுதவும்.

**ஏஜண்டுகள் தேவை !!!**

விலாசம் :—

**செல்வம் டர்க்கிரெட் ஆயில் ஸ்டோர்,**

திருச்செங்கோடு, P. O., சேலம் ஜில்லா,

உரிமையாளர்:— வேல்.

Printed by M. Vedapuri Mudaliar at Sri Lakshmi Press 207, Bazar St., Tiruvettipuram. Edited, and Published by M. Kandaswamy, at 203, Bazar St., Tiruvettipuram (N. A.)